23-6-1994
17. 06. 1994
NALLUR

*News and Articles Tamil and English Please send them to*

THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukeddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No Q / J / 104 / News / 89
*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol:- 155 Jaffna, Friday 17 June 1994 No: 13

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**
Island : Rs. 100/-
*For Advertisements*
Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukeddai

# Recognition of Christian Theological Seminary

A team of three theologians visited Jaffna on 30th May 1994 to inspect, examine and submit their recommendations about Christian Theological Seminary at Chunnakam to the Senate of Serampore College (University).

The team comprised of the following:

1. The Rev. Dr. Gnana Robinson, Principal of United Theological College, Bangalore. He was also the Principal of Tamilnadu Theological Seminary, Madurai and wrote many books.
2. The Rev. Dr. P Kambar Manickam, Principal of Tamilnadu Theological Seminary, He is attached to the Tamil Evangelical Lutheran Church.
3. The Rev. D. S Sathyaranjan. He is the Registrar of Serampore College.

Our Bishop - The Rt. Rev. Dr. S. Jebanesan also accompained them.

The team will submit its recommendations to the Senate when it sits in February 1995. It is believed that the Seminary will be recognized as an affiliated College of the Senate of Serampore College.

Serampore College was established by William Carey and received its charter to award degrees such as B. Th., B. D., M. Th., and Ph. D.

The Christian Theological Seminary was established in 1983 to prepare and train ministerial candidates This has fulfilled the dreams of pioneer American Missionaries who established Jaffna College under the name Batticota Seminary in 1823.

Hitherto, the students passing out of the 'Seminary' were awarded a 'Diploma.' Some have sat for the B. Th. external and passed with high marks. More than twenty have graduated from the Seminary and are working with the Jaffna Diocese of the Church of South India.

One past student is now working in Nuwara-Eliya District for Lanka Lutheran Church. The following past students have been ordained as Deacons and some will soon be ordained as Presbyters.

Rev. J. Thevaarud Selvam B, Th., Rev. Benjamin Jeyarajah B. Th., Rev. S. I. Anandarajan (will be completing B. Th.), Rev. S. Thevakaran, Rev. J Gnanaarugasam, Rev. Anton Sawerimuttu, Rev, T. H. Vasanthakumar.

Our former Bishop The Rt. Rev. D. J. Ambalavanar felt the need for a Seminary in Jaffna when our ministerial candidates could not proceed to India for Theological education because of difficulties faced in obtaining visas. Further, it has become necessary for our ministers to study Contextual Theology.

The Morning Star whises, The Principal, Staff and Student's of Christian Theological Seminary all success. May God bless them and use them.

## Students' Enlightenment Day

Sunday 5th June 1994 was observed as Students' Enlightenment Day in Northen Sri-Lanka. The day started with hoisting of National Flag and School flag at 8-30 a.m. Special songs composed for the day were sung in all schools. This was followed by a variety entertainment and speeches.

In the afternoon functions were held at circuit levels.

## Evangelistic Meeting at Varany - Kudathanai

A team of J. D. C. S. I. Evangelistic Committee comprising of the Rev. V. N. Tharmakulasingam, Rev. S. I. Anandarajan and Rev. Milton Solomon Mr. D. S Mathiaparanam with two youth from the Sathiapuram Church, Mr. T. Sathiananthan, Mr. S. Uthayarajah and Mr. I Jeyachandran with two members from the Nanavil Church visited Varany and Kudathanai areas on evangelistic mission from 23rd May evening to 25th May 1994 evening. They were hosted by the Rev. A. V. Jesuthasan and Mr N. T. Jeyanesan, Presbyter Varany Church and Kudathanai Church.

## UNDERNOURISHMENT IN JAFFNA

The Health Authorities in Jaffna claim that many, especially the school going children are undernourished. If this goes on unchecked, children will very soon develop complications due to undernourishment. This will also impede their education.

Parents, teachers and children are therefore, warned of impeding threat and are advised to use locally available herbs to supplement the diet.

Nutrition week is observed by Chankanai A. G. A. Division and an exhibition on nutrition was held at Victoria College, Chulipuram from 6th to 12th June, 1994.

## More ships to Jaffna

ICRC is now plying more ships between Point Pedro and Trincomalee. As a result, it is reported that, at least one ship calls on Point Pedro harbour every week.

## Kerosene for Farmers

Farmers are issued with more kerosene at Rs. 30/- per litre, This has resulted in slump in kerosene prices in the open market- Kerosene is now being sold between Rs. 40/- and Rs. 50/- per litre.

## Land mine explosions in East

Altogether eight Sri Lankan security men were killed in Trincomalee and Polonaruwa when land-mines exploded on 9th June 1994. Two were killed in Trincomalee and six in Polonaruwa. There was also exchange of gunshots at Trincomalee. It should be noted that both these areas are claimed to be under government control.

## Shelling & Cannoning from Madagal Camp

Cannons were fired along the coastal area from naval gunboats anchored off Madagal shores from early morning till late night. Sri Lankan Army stationed at Madagal also fired mortar shells towards residential areas. A few shells fell inside a refugee camp at Chankanai killing a 28-year-old familied man

## Canberra Tamil Association

The Canberra Tamil Association has donated Eight hundred Australian Dollars for the Relief Rehabilitation Ministry of the Jaffna Diocese of the Church of South India.

## STUDENTS PROTEST TWO SESSIONS IN SCHOOLS

Jaffna Educational District Zones I and II decided that all schools in Jaffna should go two sessions.

The parents and students of Jaffna Hindu College were the first to protest. A boycott was triggered off by Jaffna Hindu College students. The boycott then spread to other schools as well. As a result, a meeting was summoned by the Director of Education Zone I on 4th June. The Principals, Teachers, parents and students who were present at this meeting, opposed the decision to have two sessions in spite of the reasons given by the administrators. The Director, Zone I (i. e. South Jaffna) gave directive that any school wishing to go single session can do so. This is only a temporary arrangement. Zone II has not yet taken a decision to alter earlier decision.

## School Children participate in the extra Curricular activities enthusiastically

The Chankanai Educational Circuit conducted Tamil-Day competitions, Sports meet and Netball Matches in the recent past. Many Schools in the circuit participated. Winning teams will participate at zone level soon. Netball matches at zonal level have already started.

Under 17 and 19 teams from ten schools in the Jaffna District have entered the Cricket tournaments conducted by Jaffna Schools Cricket Association. The matches are now being played during weekends.

## SHELLING AT JAFFNA

The Army at Mandaithivu hurled mortar shells at residential area in Gurunagar, Jaffna killing three and injuring a few. Mean while an Air Force plane Surveyed the entire coastal area in the Valligamam West Division which (includes) Vaddukoddai Chankanai and Chullipuram areas). People were Panicked. It was reported that three days prior to this a naval bowser was caught to the landmine in Karainagar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். குடாநாட்டில் தாக்குதல்

மண்டைதீவுப் பகுதியிலிருந்து 13-6-94 திங்கள் மாலை இராணுவத்தினரின் செல்தாக்குதலால் பாசையூர் அந்தோனியார் தேவாலயத்தையண்டியுள்ள பகுதிகளிலுள்ள வீடு ஒன்று சேதமடைந்ததுடன் நால்வர் காயமடைந்தனர். அதே வேளை காரைநகர் பகுதியிலிருந்தும் மாதகல் பகுதியிலிருந்தும் அதிகமான செல்கள் ஏவப்பட்டு கரையோரப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காரைநகர் பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்குள், இரு முறை புலிகள் கண்ணி வெடிக்கு அங்குள்ள இராணுவத்தினர் இலக்காகி தண்ணீர் தாங்கி ஒன்று (Bowser) சேதமடைந்ததுடன் ஆறுக்கு மேற்பட்ட இராணுவத்தினரும் பலியானார்கள். இதனையடுத்து கடந்த சில நாட்களாக குண்டுவீச்சு விமானங்கள் மாலை நேரத்தில் யாழ் குடாநாட்டைச் சுற்றித் தாழப்பறந்து செல்வதால் மக்கள் பீதியுற்றுக் காணப்படுகின்றனர்.

— —

### மண்ணெய் விலை வீழ்ச்சி

யாழ் குடாநாட்டில் மண்ணெய்யின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்து வருகிறது தற்சமயம் இது ஒரு லீற்றர் ரூபா 40/- இறகு பெறக்கூடியதாகவுள்ளது விவசாயிகளுக்கு கூடிய மண்ணெய் ரூபா 30/- இற்கு கொடுக்கப்பட்டுள்ளது

— —

### சர்வதேச செஞ்சிலுவை சங்க சேவை

சர்வதேச, செஞ்சிலுவை சங்க சேவையினால் இப்பொழுது பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்குமிடையில் அதிக கப்பல் சேவை நடத்தப்படுகின்றது இதனால் ஆகக்குறைந்தது ஒரு வாரத்திற்கு ஒரு கப்பல் பருத்தித்துறைத வருகின்றது.

## யாழ் குடா நாட்டில் கண் நோய்

யாழ் குடாநாட்டில் கண்நோய் அதிகமாக பரவி வருகின்றது. இது பொதுவாக கடும் வெய்யில் காலத்திலும் ஈ, கொசு, தூசியாலும் பரவுகின்றது. சுகாதாரம் பேணப்படாத நிலையில் இது அதிவேகமாக பரவுகின்றது. தற்போது நடைபெறும் கண்நோய் ஆரம்பத்தில் சிகிச்சை பெறாது விட்டால் நோயின் தாக்கம் கண்பார்வையை பாதிக்கலாம், என வைத்தியர்கள் கூறுகின்றார்கள். கண்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உபயோகிக்கும் துவாய் கைக்குட்டை போன்றவற்றை மற்றவர்கள் உபயோகிக்காது நோய் அகன்றதும் அவற்றை நன்கு கழுவி காய விடவேண்டும். நோய் மற்றவர்களுக்கு பரவுதலை தடுக்க நோய் மாறும்வரை பொது மக்கள் கூடும் இடத்தை தவிர்த்துக் கொள்ளவும் அது ஒரு பக்றியா நோயென கருதப்படுவதால் தகுந்த சிகிச்சை எடுப்பதுடன் போசாக்கு நிலையும் கவனித்தல் நல்லது.

— —

## விவசாயிகள் தற்கொலை

அனுராதபுரம் பொலநறுவை பகுதியில் உள்ள விவசாயிகளில் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. B. B. C. செய்தியாளர்களின் கருத்துப்படி விவசாயிகள் மிக அதிகமான வட்டிக்கு பணம் பெறுகின்றனர். இக்கடனை செலுத்த முடியாத இடத்து அவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட சலுகை நிறுத்தப்பட்டதன் நிமித்தம் அவர்கள் உரவகைகளையும் மிகவும் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியுள்ளது. வரும் லாபம் கடனை கொடுப்பதற்கு போதுமானதாக இல்லை. அரசாங்கம் இது பற்றி மிகவும் அக்கரையுடன் ஆராய்ந்து வருகிறது.

## ஆதீன நற்செய்திப்பணி வாரம்

12-6-94 ஞாயிறு முதல் 18-6-94 சனி வரை.

இவ்வாரத்திற்கான மகுட வாக்கியம்:-

" மனந் திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது "

வட்டாரரீதியாக இவ்வார விழாக்கள் நடைபெறும்.

12-6-94 ஞாயிறு மேற்குறித்த மகுடவாக்கியத்தில் ஆராதனைகள் சபைகளின் நடத்தப்படும்.

13-6-94 திங்கள் அச்சுவேலி வட்டாரம்
அச்சுவேலி சபையில் மாலை 3. 30 மணி

14-6-94 செவ்வாய் சாவகச்சேரி வட்டாரம்
சாவகச்சேரியில் மாலை 3-30 மணி

15-6-94 புதன் உடுவில் வட்டாரம்
சத்தியபுரத்தில் மாலை 3 30 மணி

16-6-94 வியாழன் மானிப்பாய் வட்டாரம்
சண்டிலிப்பாயில் மாலை 3-30 மணி

17-6-94 வெள்ளி வட்டுக்கோட்டை வட்டாரம்
மூளாயில் மாலை 3-30 மணி

மேற்குறிப்பிட்ட வட்டாரங்களில் தொடக்க ஆராதனை, மகுட வாக்கியத்தில் கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறும்.

18-6-94 சனி நடத்துவதாக இருந்த ஆதீன நற்செய்தி விழா 2-7-94 சனிக்கிழமை மருதனாமடம் ஆச்சிரமத்தில் காலை 8-30 முதல் மாலை 5-00 மணி வரை நடைபெறும். யாவருக்கும் மதிய உணவு கொடுக்கப்படும். நிகழ்ச்சிகள்:- 8-30 மணி தொடக்க ஆராதனை

10-00 மணி கருத்தரங்கு
11-30 மணி காலை நிகழ்ச்சிகள்
1-00 மணி மதிய உணவு
3-00 பகிரங்க சுவிசேஷக் கூட்டம்
விசேஷ உரை அத்தியட்சர்
மகா கனம் கலாநிதி S. ஜெபநேசன்

8 6 94

ஆதீன நற்செய்திப் பணிக் குழுவினர்

## -தளபதி-- நெல்சன் மண்டேலா-

நெடிய உருவமும் நேரிய பார்வையும்
நிமிர்ந்த நடையும் கூரிய அறிவும்
வலிந்த மனமும் வறுமையில் செம்மையும்
நெல்சன் மண்டேலா, வாழ்க! நின்நாமம்.
சிறுபான்மை ஆங்கிலர் சீயென்றிகழ
பெரும்பான்மை சுதேசிகள் அடிமைவாகவோ
பேடிகள் தம் பேதமை நீக்க ஆக்கினாய்
ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அகலமாய்.
கொடியர் துவேஷம்: கறுப்பரை வதைக்க
வெள்ளையர் சினக்க: மானிடர் வியக்க
காந்தியின் வேஷம்: தரித்திர் நொருக்க
இருபத்தியேழு ஆண்டுகள் இருண்ட சிறையில்.
அருண்டனர் ஆபிரிக்கர் விடிவு நோக்கி
தெரிந்தது தென் ஆபிரிக்காவில் விடிவெள்ளி
ஒளிர்த்தார் தாழ்மையின் செம்மல் டி கிளார்க்
அழிந்தது " அப்பார்த்திட்டே " முந்நூறு ஆண்டில்,
எதிரிகளும் எழுந்து காட்டினர் ஏற்றத்தாழ்வு
தன்னைப் போல் அயலவனையும் ஏற்றார்; அன்பாய்
தன் உபதளபதியாக கிளார்க்கும்; அமைச்சராக
புத்தலேஸியும்; தளபதியானார் மண்டேலா.

---( வண: ரூபன். அருட்செல்வம். )

## க பொ த உயர்தர பரீட்சை

க பொ த உயர்தர பரீட்சை ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி ஆரம்பிகுமென கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. இப்பரீட்சைக்கான ஏற்பாடுகள் பரீட்சைத் திணைக்களம் செய்து வருகின்றது. வடக்கிலும் இப்பரீட்சை நடைபெறுவதற்குரிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன-

— —

### மாணவர் பாடசாலையை பகிஸ்கரிக்கின்றனர்

தற்சமயம் நடைமுறையில் உள்ள இருநேர வகுப்புகளை மாணவர்கள் பகிஸ்கரித்து வருகின்றனர். இது ஆரம்பத்தில் யாழ் இந்துக் கல்லூரியினால் ஆரம்பிக்கப்பட்டு இப்போது அனேகமாக மற்ற நகர்புற பாடசாலைகளிலும் ஒருநேரப் வகுப்புகளாக்கப்பட்டதுடன் கைவிடப்பட்டாலும் கிராமப்புறங்களின் சில பாடசாலைகளில் இப்பொழுதும் இருநேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன, இதையடுத்து சில பாடசாலைகளில் மாணவர்கள் பகிஷ்கரிப்பைத் தொடர்கின்றனர்.

— —

### வை. எம். சி. ஏ, 150-வது ஆண்டு நிறைவு

கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் 150 ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஓர் தோத்திர ஆராதனை 12 ம் திகதி யூன் மாதம் 1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப 4 30 மணிக்கு உடுவில் தென் இந்தியத் திருச்சபை ஆலயத்தில் வட பிராந்திய வாலிபர் சங்கத்தினால் நடாத்தப்பட்டது வட பிராந்திய தலைவரும் உடுவில் Y M C A தலைவருமான சேவக் சாம் அல்பிரட் அவர்கள் அருட்திரு வி. ராஜ்குமார் அருட்திரு ஏ ஜெயக்குமாரன் ஆகியோரின் உதவியுடன் ஆராதனையை நடத்தினர். பரி ஹென்றிஸ் இளவாலை அதிபர் வண பிதா கலாநிதி ஹென்றி ஞானபிரகாசம் அருளுரையாற்றினார். திருமறைப்பாடங்கள் யாழ்ப்பாண Y M C A அங்கத்தவர் திரு S. P ஜீவானந்தம் நவாலி Y M C A அங்கத்தவர் திரு. N அன்புராசா ஆகியோரால் வாசிக்கப்பட்டது. உடுவில் Y M C A சேர்ந்த திருமதி K பவசிங்கத்தினால் தேவாரம் பாடப்பட்டது. உடுவில் பாடகர் குழுவினால் ஒரு விஷேட பாடல் பாடப்பட்டது. ஆராதனையை தொடர்ந்து தேனீர் விருந்தும் ஆலைய வளாகத்தில் நடைபெற்றது. சகல Y M C A யிலிருந்து அநேக அங்கத்தவர்கள் பங்கு பற்றினர்.

— —

### ஐ. தே. க. தலைமைப்பீடம் அதிர்ச்சி

எதிர்வரும் தேர்தல் நிலைமை குறித்து அறியும்படி தேர்தல் தொகுதிகளுக்கு அனுப்பப்பட்ட புலனாய்வுக்குழுவினர் தமது அறிக்கையை ஐ. தே. க. தலைமைப் பீடத்துக்குக் கையளித்துள்ளனர். இவ்வறிக்கையில் சந்திரிகா வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் இவரே வெற்றி பெறுவார் எனக் குறிப்பிட்டிருப்பதால் ஐ. தே. க. தலைமைப்பீடம் இவ்வறிக்கையால் அதிர்ச்சிமடைந்துள்ளது.

— —

## பத்து வயதில் பல்கலைகழக பட்டம்

அமெரிக்காவை சேர்ந்த மைக்கல் குறேனோ என்னும் பத்து வயது நிரம்பிய சிறுவன் கடந்த சனிக்கிழமை நடை பெற்ற தனது பல்கலைகழக பட்டமளிப்பு விழாவில் தமது பட்டத்தை பெற்றுக்கொண்டார், இவர் தமது பட்டபடிப்பை 6 வயதில் ஆரம்பித்து 10 வது வயதில் பட்டத்தை பெற்று அமெரிக்காவிலேயே வயது குறைந்த பட்டதாரி என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

— —

### நற்செய்திக் கூட்டம்

பெந்தக்கோஸ்தே பெருவிழாவை முன்னிட்டு மே மாதம் அராலித் திருச்சபையினர் ஓர் நற்செய்திக் கூட்டத்தை நடாத்தினர் இக் கூட்டம் சபை ஊழியர் திரு.டி.எஸ் மதியாபரணத்தின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது. நற்செய்தியினை திரு எஸ். சத்தியமூர்த்தி வழங்கினார் கலை நிகழ்ச்சிகளாக வாலிபப் பிள்ளைகளின் தனிப் பாடல்கள் குழுப்பாடல்கள் நாடகங்கள் என்பனவும் மனம் மாறியமைந்தன் வில்லுப்பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை ஒளி

கடன் வாங்குதல் பிச்சை எடுப்பதைவிட மிகவும் மேலானதன்று.


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை

Estd. 1841

மலர்: 155 17- 06 - 1994 இதழ்: 13


## செறம்பூர் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் வருகை

கடந்த மாதம் 31 ஆம் திகதி, செறம்பூர் பல்கலைக்கழக ஆணைக் குழு--சுன்னாகத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் இலங்கைக் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியைச் சந்தித்தது.-- இச்சந்திப்பின் நோக்கம், இக் கல்லூரி, செறம்பூர் பல்கலைக் கழகக் கல்லூரிக்குடும்பத்தில் ஓர் உறுப் பினராக ஏற்கப்படுவதற்கு, வேண்டிய தகமைகள் கொண்டுள்ளனவா வென, நேரில் கண்டு ஆராய்வதே, இதற்காகவே இக்குழு செறம்பூர் செனட் சபையினரால் அனுப்பப்பட்டது.

இக்கல்லூரி, 1983 ஆம் ஆண்டு, நமது முன்னால் பேராயர் அருள் மிகு. டி,ஜே.அம்பலவாணர் அவர்களின் அயராத முயற்சியினால்,இறை வனின் திருவருளால் நிறுவப்பட்டது.

இச்செமினரி, யாழ், ஆதீன உறுப்பினர்க்கு மட்டுமல்ல தமிழ்ப்பகு திகளிலுள்ள அனைத்து மிஷன் சபைகளுக்கும் உரியதாயிருக்க வேண்டு மென்ற பரந்த நோக்குடன் தொடங்கப்பட்டது. திருச்சபை ஒருமைப் பாட்டு நோக்குடன் இச்செமினரி தொடக்கப்பட்டாலும், இன்னும் மற்ற மிஷன் சபைகள் உத்தியோக பூர்வமாக ஏற்கத் தயங்குகின்றனர். கடந்த பத்தாண்டுகளாக இச்செமினரியின் ஆழுகைச் சங்கம் விடா முயற்சி எடுத்து வருகிறது.

இருந்தும், மற்ற மிஷன் சபைகளிலிருந்து-- தன்னார்வத்துடன் சில மாணவர்கள் செமினரியில் சேர்ந்து குருத்துவ பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவர் நுவரேலியாவிலுள்ள லுத்தரன் சபையில் குருத்துவப் பணியாற்றி வருகிறார். ஏனையோர் யாழ். ஆதீனச் சபைகளில்--தம் விருப்பத்தின் படி பணியாற்றி வருகின்றனர்.

செறம்பூர் ஆணைக் குழு-- இக்கல்லூரியின் பாடத்திட்டம், மாண வர்களின் அடிப்படைக் கல்வி நிலை-- விரிவுரையாளரின் தகைமைகள் --- கல்லூரியின் நூலகம்--- வரவு செலவுக்கணக்கு விவரங்கள்-- மாண வர் விடுதி—வகுப்பறைகள்--விரிவுரையாளர்களின் இருப்பிடம்--மாணவி கள் விடுதி--விளையாட்டிடம் ஆகியவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து-- நிறைவேற்றப்பட வேண்டியனவற்றைச் சுட்டிக் காட்டி, அதற்குரிய வழிவகைகளைச் சிபாரிசு செய்தனர்.

செறம்பூர் B. Th. பட்டப்படிப்பிற்கான புதிய பாடத்திட்டம் வழங்கப்பட்டது வகுப்புக்கள் அமைப்பதற்கான சில மாற்றங்கள்-- படிக்கும் புதிய முறைகள்--- மாணவர்கள் ஈடுபட வேண்டிய செயல் முறைத்திட்டங்கள் ஆகியன சிபாரிசு செய்யப்பட்டன. பொதுவாக கல்லூரியின் பல அமைப்புக்கள் பாராட்டுடன் ஏற்கப்பட்டன.

இவ்வாணைக் குழு— இக்கல்லூரி B Th. பட்டப் படிப்பிற்குரிய தாக ஏற்கலாமென செனற் சபையின் அமுலாக்கல் குழுவிற்குத் தங்கள் சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும்—இக்குழு மீண்டும், அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை நுணுக்கமாக ஆராய்ந்து--பின்னர் செனற் சபைக்கு தங்கள் சிபாரிசை சமர்ப்பிக்கும் 1995 பெப்ரவரி மாதத்தில் கூடும் செனற் சபை தமது தீர்மானத்தை அறிவிக்கும்.

1823 இல் அமெரிக்கன் மிஷனெரிமார், தமிழில் இறையியல் கல்வி பயிற்றப்பட வேண்டுமென, வட்டுக்கோட்டையில் தொடங்கிய (Batti-cotta Seminary) செமினரி, பின்னர் சில தவிர்க்க முடியாத காரணங் களால்; சில ஆண்டுகளுக்குப் பின் மூடப்பட்டது. அதன்பின், 1983இல் இறைவனின் திருவருளால் இக்கல்லூரி தொடங்கப்பட்டு--கடந்த பத்து ஆண்டுகளாக இயங்கி வருகிறது. செறம்பூர் செனற் சபை தமது கல்லூரியை B. Th. பட்டப்படிப்பிற்கான கல்லூரியாக ஏற்றபின் இக்கல்லூரி, தமிழ்ப் பகுதிகளில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக் கும், சபைகளுக்கும் பல துறைகளில் பேருதவியாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

இதனை மனதிற் கொண்டு, இக்கல்லூரியின் முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்' இலங்கையி[illegible] சபைகளும், இச்செமினரியின் பரந்த நோக்கைப் [illegible] ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்

## செய்தித்திரட்டு

### தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

அருட் கலாநிதி தனிநாயகம் அடி களாரின் 2வது நினைவுப் பேருரை, கடந்த மாதம் 6ஆம் திகதி-(6.5.94) - தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனப் பேராயர் கலாநிதி S.ஜெப நேசன் அவர்களால் புனித சவேரி யார் குருத்துவக் கல்லூரியில் நிகழ்த் தப்பட்டது. இந்நிகழ்ச்சி, தனி நாயகம் தமிழ் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது.

### ஏழாலை வடக்குத் திருச்சபையின் சிறப்பு வழிபாட்டு நிகழ்வுகள்:

ஏழாலை வடக்குத் திருச்சபை ---பலாலி இராணுவ முகாமின் அண்மையில் இயங்கிக் கொண்டி ருக்கின்றதென்பதை யாவரும் அறி வர். இராணுவத்தினரால் இச்சபை யின் ஆலயம் அழிக்கப்பட்டதால் ---சபையார் ஒருவரின் வீட்டில் ஆராதனைகள் கிரமமாக நடை பெற்று வருகின்றன.

பல வசதியீனங்கள் இருந்தும், இச்சபையில் புனித வார நிகழ்ச்சி கள் சிறப்பாக நடைபெற்றன. குருத்தோலை ஞாயிறன்று சாட்சிப் பவனியாகச் சிறுவரும் முதியோரும் ஓசன்னாப் பாடலைப்பாடிக் கொண்டு வீதிதோறும் சென்று இறைவனை மகிமைப்படுத்தினர். சிறுவர் ஆராதனை, செல்வன் திரோஷன் இரத்னதயாவின் தலை மையில் நடைபெற்றது. திருமதி. தேவகுமாரி இராஜ்குமார் இவ்வா ராதனையில் அருட்செய்தி வழங்கி னார் இச்செய்தி அங்கு சமூகம ளித்த அனைவருக்கும் பக்திநிறை வைக் கொடுத்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்து நடத்தப்பட்ட சிலு வைத்தியான வழிபாட்டில் திருமதி -. சுகிர்தம் தயானந்தன் சிறப் புப்பாடல் பாடினார்,-'சிலுவைக்கு வழிவகுத்தோர் '-- என்ற பொரு ளில், வண.V.இராஜ்குமார், வண. ந.ஜெயராசா, திரு.V.S.பத்மதயா ளன் ஆகியோர் செய்தி வழங்கி னர்.

பின்னர்,உயிர்ப்புத் திருநாளன்று காலை ஐந்து மணிக்கு மெழுகு வர்த்திப் பவனி, இக்கிராம மக்க ளுக்குச் சாட்சியாக விளங்கிற்று. ஆலயத்தில் பவனியைத்தொடர்ந்து நடத்தப்பட்ட ஆராதனையில் திருமதி. வசந்தி இரத்தினதயா அருட்செய்தி வழங்கினார். திரு விருந்து ஆராதனை சபைக்குருவி னால் நடத்தப்பட்டது இதன்பின் சபையின் மாதர் சங்கத்தினரால் அனைவருக்கும் தேநீர் விருந்துப சரணை நடத்தப்பட்டது.

### உயிர்ப்புத் திருநாட் பஜனை:

ஏப்பிரல் நான்காம் திகதி இப் பஜனை--சபைப்போதகர் வண. V, இராஜ்குமாரின் தலைமையில் நடைபெற்றது. வண. B.ஜெயராஜ் இறைவேண்டலுடன் பஜனையைத் துவக்கி வைத்தார். இப்பஜனையில் அளவெட்டி சபை ஏழாலை வடக்கு சபை வாலிபர் சங்கம் -- மகளிர் மன்றம்--சிறுவர் சங்கம் ஆகியன பங்கெடுத்தன. கிராமத்து மக்கள் திரண்டு வந்து பஜனையில் ஆர்வ த்துடன் கலந்து கொண்டனர்.

### ஞான ஒடுக்கம்

கடந்த மே மாதம் 24 ஆம் [illegible]தவ சேவ ஆச்சிர[illegible] ஏழாலை வடக்குச் சபை தெல்லிப்பளைச்சபை, ஆகியன ஒருங்கிணைந்து-- ஞான ஒழுக்கத் தில் கலந்து கொண்டனர்.

இவ்விரு சபைகளின் குருவான வர்-- வண. V,இராஜ்குமார் அவர் கள். ஆச்சிரம சிற்றாலயத்தில், நடத்திய திருவிருந்து வழிபாட்டை வண. சேவக்சாம் அல்பிறட் அவர் கள் அருட்செய்தியை வழங்கினார்.

தேநீர் இடைவேளைக்குப் பின்– சோப்பாய் திருச்சபைப் பாடகர் குழு-- சிறப்புப் பாடல் நிகழ்ச் சியை உற்சாகமாக நடத்தினர். புதிய பாடல்களும் சபையாருக்குப் பழக்கப்பட்டது.--இதன் பின் வண, இராஜ்குமார் அவர்கள் --"ஆவியா னவரின் வரங்கள் '' என்ற பொரு ளில்- ஏற்ற வேத ஆதாரங்களுடன் வேதப்படிப்பை நடத்தினார்.

நன்பகல் 12-00,மணியளவில் வண. S,P. ஜெயசிங்கம் அவர்க ளால்-- ''மன்றாட்டு ஜெப வழி பாடு ''நடத்தப்பட்டது.--- சுண்டிக் குளி பரி. யோவான் திருச்சபைக் குரு--- வண. நேசகுமார் அருட்ச் செய்தி வழங்கினார்.

நண்பகல் உணவு, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மண்டபத்தில், சமூகமளித்த அனைவருக்கும் வழங் கப்பட்டது, —பிற்பகல் 2---00. மணிக்கு வண்ணார்ப்பண்ணை மெதடிஸ்த சபைக்குரு-- வண. டெறன்ஸ் அடிகளார்---''பாவம்'' என்ற பொருளில் ஆன்மீக எழுச் சிக்கான சிறப்புச் செய்தியை வழங் கினார்.

இறுதியில் நடைபெற்ற--'வினா- விடை'' அரங்கு, வண. V.இராஜ் குமார் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. இதில்,வண. ஆனல்ட், வண.ஜெயசிங்கம், வண டி. எஸ் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் அளித்த விடைகள் அனைவருக்கும் அதிக பயனளித்தது.

இறுதியில் நடைபெற்ற ஐக்கிய தேநீர் விருந்துடன்--ஞான ஒடுக் கம் இனிது முடிவுற்றது.

### நற்செய்திக் குழுவின் பணி குடத்தனை, வரணி

தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் நற்செய்தி குழு 23ஆம் திகதி மே மாதம் முதல் 25ஆம் திகதி மே மாதம் வரை குடத்தனை வரணியில் பணியாற் றியது. அருட் திரு வி என் தர்ம குலசிங்கம்' அருட்திரு எஸ் ஜ ஆனந்தராசா, திருவாளர்கள் ரி சத்தியநாதன், எஸ் உதயராசா அராலி ஊழியன் திரு டி எஸ் மதியாபரணமும் சத்தியபுரவாசி பர்கள் இருவரும், நுனாவில் ஊழியன் திரு. ரி ஜெயசந்திரனும் இரு அங்கத்தவர்களும் இக்குழுவில் அங்கம் வகித்தனர். இவர்கள் குடத்தனை வரணி ஆகிய இடங்க ளில் தங்கி அக் கிராமங்களில் உள்ள பகல் பராமரிப்பு நிலை யத்தில் கல்வி பயின்ற பிள்ளை களின் வீடுகளை சந்தித்து நற்செய் தியை அறிவித்தார்கள். இரு கிரா மங்களிலும் பகிரங்ககூட்டங்கள் மாலை நடைபெற்றது. இதற்கு உதவியாக குடத்தனை திருச்சபை ஊழியரும் பகல்பராமரிப்பு நிலைய ஆசிரியையும் திரு. இராசரட்ணம் குடும்பத்தினரும் வரணி சபை ஊழியனும் திரு. நவரட்ணமும் ஒத்துழைப்பு நல்கினார்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

NALLUR BRANCH LIBRARY



# The Morning Star

Diocesan Office, Vaddukoddai. 17 - 06 - 1994

EDITORIAL

## Christian Witness In The Context of Asian Pluralism

'The Church being peoples' Church and being responsible for the Gospel should be a worshiping, sharing & serving community by getting involved in peoples' struggle'.

The above underlines the basis on which the Church should bear witness to Christ, in the pluralistic Asian Society. Asion Society includes many ethnic groups. There is a variety of languages and dialects. Asian people adapt diverse cultures and follow different religions. Although many common factors try to bind these people of varied cultures and ethenic identities together, there are many barriers which keep them apart.

Refusal to accept others views is on the increase. Fundamental rights are denied to many. Religions of the majority try to exert pressure on their own governments to oppress the minorities. People fight because of their language differences and often sinister moves are adopted to force the language of the majority on the minorities. The Cultural religious & ethnic pluralism has become a confusion It prevents people from uniting in building up God's Kingdom on earth.

If Christians are to bear witness they should first be united and form one Church of Christ. For this we should recognize the various gifts the fellow Christians posses St. Paul in his first letter to Corinthians says' There are varieties of gifts, but the same spirit, there are varieties of service, but the same Lord, and there are varieties of working, but it is the same God" (1 Co 12:4—6). Our gifts should not be used to bring about divisions within the Church. Unfortunately, because some individuals & groups claim superiority & insist that only their gifts are 'Charisma'- gifts of the Holy spirit Church is disintegrating into fragments. It is the same spirit who gives different people and groups various gifts, Therefore, they all should be used for the common good (1 Co 12:7). If we are not united, we cannot bring together the warring factions to common understanding. The God in Trinity work is unison in creation, redemption and consummation. So we should work unitedly in establishing the 'Kingdom of Christ' on earth.

The second basis for our Christian witness should be our faith in one God. It is said in the letter to the Ephesians 'There is one Lord, one faith, one baptism and one God and Father of us all'. Because it is the 'one God' who created all living beings all are children of the same God. Ben Gurien, the 1st Primeminister of Israel said, before Americans or Russian, before Israelites Arabs or before every thing that separates man from man were formed God created man in his own image" We should therefore be able to see the image of God in others

When God created man he blessed the entire mankind and said Be fruitful, multiply and subdue the earth.' Therefore each man by his birth right has the claim for equality in all respects. All resources should therefore be shared equally; the wealth should be distributed evenly and all men should be treated equally. Therefore the caste system which makes one superior over another, the uneven distribution of wealth which makes a section of mankind rich and others poor or any form of exploitation is abhorrence to God. God involves himself in the struggles of the oppressed. We find that God saw the infliction of Hebrews and heard their cry. Therefore he came down to liberate them. When Ahab deceitfully annexed Naboath's wineyard to his own, God demanded justice from Ahab We Christians too should share in the struggles of people whose rights are denied.

It is the duty of the Church to work among the down trodden, the poor and the marginalized and try to lift them up from the State they are in Jesus never turned away those who came to Him. He fed them; showed them the way of life, He taught them the meaning of life; He lifted them up from their miserable State and healed their infirmities. More than all, He gave His own life to these whom He worked for. We should likewise show the light to those in darkness; Counsel the lost; Comfort the comforties, console the bereaved; feed the hungry; clothe the nacked and give life to the lifeless.

The words of St. Paul 'There is one faith, one Lord, one baptism, and One God' reminds us to renew our faith in Christ. Our commitment should be to spread the Good News of Jesus Christ. The saying 'All religion Lead to the Same God and all religions are different paths of redemption,' doesn't hold good. It is true that all religions have veiled revelation of God in them. Even St. Paul says "God has revealed himself from the beginning of creation, through every thing he Created but men not honouring the creator started to worship the created beings instead of God". (of Rom 1; 18 - 23.) Yes there are elements of truth in all religions but all have become oppressive in nature. Castism is justified in the name of religion.

Jesus by his deeds broke all barriers. He broke the wall that was between the Jews and gentiles, there by all people are granted direct access to God. He was never a respector of persons. He humbled those who thought very high of themselves but praised the Samaritans and gentiles. He drank water from Samaritans, ate with publicans and sinners, and treated the pharisees and sinners alike. The same Jesus is now working among the oppressed the marginalized and the rejected through his Holy Spirit. It is our duty to reveal this Jesus to all. For this, we must bear witness to Christ in words and in deeds.

### Indian Theologians at Jaffna College

The Rev. Dr Gnana Robinson, Principal, United Theological College, Bangalore. The Rev. Dr. P. Kambar Manickam, principal Tamilnadu Theological Seminary, Madurai and The Rev. D. S. Sathyarajan, Registrar, Senate of Serampore College ( University ) visited Jaffna College on 1st June 1994.

Dr. Kambar Manickam addressed the students at a special assembly. He based his theme on Luke 2 : 52 and said children should grow physically and mentally and should receive grace from God and good name from men.

Rev. Sathyaranjan addressing the Staff, enumerated the problems that could be faced by teachers and urged teachers to be prudent.

Dr. Gnana Robinson citing examples from Old Testament, preached on Liberation Theology".

Lively discussion followed.

### Ben Bavinck in Jaffna

Mr C B Bavinck, former Supervisor Primary School' , Jaffna College has come again to live in Jaffna. He will work for the Methodist Church in Jaffna and will be here for one year.

## Farmers Commit Suicide

Increasing number of farmers in Anurudhapura and Polonaruwa areas are committing suicide according to BBC report. The farmers have to borrow loans at very high interest rates and those unable to repay commit suicide. Farmer's subsidy is withdrawn and they have to buy fertilizers at higher prices and the income from harvest is not sufficient to repay loans. The Government is seriously studying these suicides, for they feel it may turn into a political issue.

### We watch over ....

(Last week continuation)

a more convenient time, but the family wanted to give us their report, I think they felt less at risk for further reprisal due to our involvement."

As Mark was leaving, the Sri Lanka team had large 'bibs' (squares that hang front and back ( printed with the PB logo on them.) This is to make it obvious during an observation who is a PBI observer. The project is dealing with the issue of "racism" within PBI: we do not depend on skin colour to distinguish us from the surrounding community. We have always included SriLankans on the Project Committee and are dealing with how to lessen the gap in the nonviolence movement between different communities

### A Thanksgiving Serviee to mark the 150years of service

The Northern Regional council of Y M C As held a Thanksgiving Service to mark the 150 years of the foundation of the Y M C A on Sunday the 12th of June 1994 at 4 30 p m at the Uduvil C S I Church. The Chairman the Northern Regional Council and , the President of the Uduvil Y M C A Sevak Sam T Alfred led the Service assisted by the Rev V, Rajkumar and the Rev. A. Jeyakumaran. The Rev. Fr. Dr Henry Gnanapiragasam Rector St Henry's Ilavalai gave the message for the day. Scripture lessons were read by Mr S P Jeevanantham of the Jaffna Y M C A and Mr N Anpurajah of the Navaly Y M C A Mrs. K. Bavasingam of the Uduvil Y M C A sang a Thevaaram and the Uduvil Church choir rendered a special anthem. The Service was followed by a tea Party in the Uduvil Church lawn. Many representatives from all the Y M C As in the North attended this Service

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No Q J/140/89 News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 18?, 1st Cross Street, Jaffna on Friday the 17th of June 1994 and published by D. S. SOLOMON, Diocesan Office Vaddukoddai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org